HEMANG RESOURCES LIMITED

CIN: L65922TN1993PLC101885

November 15th, 2025

To,
BSE Limited.
Department of Corporate Services,
Phiroze Jeejeebhoy Towers,

Dalal Street, Fort, Mumbai- 400001.
Fax No. 022- 2272 2037

REF: Hemang Resources Limited (ISIN- INE930A01010)
BSE Scrip Code: 531178

Sub: Newspaper Cutting of Published Unaudited Financial Results for the quarter ended September 30th, 2025.

Dear Sir/Madam,

Pursuant to Regulation 30 and 47 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulation, 2015, please find enclosed copies of Unaudited Financial Results of the Company for the quarter ended September 30th, 2025, published in newspaper namely Business Standard (English) and Thamizh Murasu (Tamil) newspapers on November 15th, 2025.

This is for your information and records.

Yours faithfully,

For, Hemang Resources Limited

Risha Rahul Jain Digitally signed by Risha Rahul Jain Date: 2025.11.15 16:14:03 +05'30'

Risha Rahul Jain
Company Secretary cum Compliance officer
Membership no. A75884

Encl.: as above

Registered office: Flat No: 69, 2nd Floor, Bhaiya Complex, Pursaiwakkam High Road, Chennai– 600007 (TN)
Corporate office: Bcc House, 8/5, Manoramaganj, Navratan Bagh Main Road, Indore-452001, MP
Contact No: 0731-4034219, Email: cs@bhatiacoalindia.com
website: https://www.bhatiacoalindia.com/BIIL/Index.htm

டெல்லி கார் குண்டுவெடிப்பில் தீவிரவாதிகள் பயன்படுத்திய

'டார்க் வெப்' தொழில்நுட்பத்தால் திணறும் புலனாய்வு அமைப்புகள்

2 ஆண்டாக தீட்டப்பட்ட சதி அம்பலம்

புதுடெல்லி, நவ. 15- அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, இயல்பான வாழ்க்கை வாழும் படித்த இளைஞர்களைக் கொண்டு பயங்கரவாதச் செயல்கள் அரங்கேற்றப்படுவது டெல்லி குண்டுவெடிப்பு விசாரணையில் அம்பலமாகியுள்ளது.

டெல்லி கார் குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக நடத்தப்பட்டு வரும் விசாரணையில், பயங்கரவாதத்தின் வளர்ந்து வரும் புதிய பரிணாமம் குறித்த அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன. மருத்துவர்கள் போன்ற உயர் கல்வி கற்ற இளைஞர்களைக் கொண்ட இந்த பயங்கரவாதக் குழுவினர், தங்களது சதித் திட்டங்களை அரங்கேற்ற அதிநவீன தொழில்நுட்பத்தை முழுமையாகப் பயன்படுத்தியுள்ளனர். குறிப்பாக, 'சிக்னல், செஷன், த்ரீமா' போன்ற குறியீடு செய்யப்பட்ட ரகசிய செய்தி பரிமாற்ற செயலிகள் மூலம் தங்களுக்குள் தகவல்களைப் பரிமாறிக் கொண்டுள்ளனர். இதன் மூலம், புலனாய்வு அமைப்புகளால் தங்களது உரையாடல்களை எளிதில் கண்காணிக்க முடியாத நிலையை அவர்கள் உருவாக்கியுள்ளனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக தீட்டப்பட்ட இந்த சதித்திட்டத்தில், இணையதளம் மூலமாகவே மூளைச்சலவை செய்வது, பல நகரங்களில் தாக்குதல் நடத்த திட்டமிடுவது, நிதிப் பரிமாற்றம் செய்வது என அனைத்தையும் இந்த ரகசிய செயலிகள் வழியாகவே செய்துள்ளனர். மேலும், சட்டவிரோத ரகசிய இணையதளமான 'மறைநிலை இணையதளத்தை' (டார்க் வெப்) பயன்படுத்தி, 'ஒயிட் காலர் ஜிஹாத்' தொடர்பான பயங்கரவாத சிந்தனைகளைப் பரப்பியதும் தெரியவந்துள்ளது. இந்தக் குழுவினர், தடயங்கள் அதிகம் சிக்காத வகையில் சக்தி வாய்ந்த வெடிகுண்டுகளைத் தயாரிப்பதிலும் நிபுணத்துவம் பெற்றுள்ளனர். சுமார் 3,000 கிலோ வெடிமருந்துப் பொருட்களைக் கொண்டு, சாதாரண கைக்கடிகார பேட்டரி மற்றும் சர்க்யூட் மூலம் வெடிக்கும் அதிநவீன குண்டுகளை இவர்கள் தயாரித்துள்ளனர். மேலும், 'உளவுத் துறை பாணியிலான மின்னஞ்சல்கள் மற்றும் ரகசிய சர்வர்களைப்' பயன்படுத்தி, தங்களது டிஜிட்டல் செயல்பாடுகளை யாரும் கண்டுபிடிக்க முடியாதபடி மிகுந்த பாதுகாப்புடன் இயங்கியுள்ளனர். சமூகத்தில் இயல்பாக வாழும் இதுபோன்ற படித்த பயங்கரவாதிகளை அடையாளம் காண்பதில் உள்ள குறைபாடுகளை இந்தச் சம்பவம் வெளிச்சம்போட்டுக் காட்டியுள்ளது. எனவே, 'ரகசிய செயலிகளைக் கண்காணிக்கும் மென்பொருட்களை மேம்படுத்துதல், மாநில மற்றும் தேசிய புலனாய்வு அமைப்புகளுக்கு இடையே ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல், பொதுமக்களும் விழிப்புடன் இருத்தல், மற்றும் துருக்கி, பாகிஸ்தான் போன்ற நாடுகளுடன் சர்வதேச புலனாய்வு ஒத்துழைப்பை அதிகரித்தல்' ஆகியவற்றின் மூலமே இதுபோன்ற டிஜிட்டல் பயங்கரவாதத்தை முறியடிக்க முடியும் எனப் பாதுகாப்பு நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடந்த நிகழ்ச்சியில், சென்னை மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கான உணவு திட்டத்தை தொடங்கி வைத்து, அவர்களுக்கு உணவு வழங்கி கலந்துரையாடினார். இதில் அமைச்சர்கள் கே.என். நேரு, தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மதிவேந்தன், மேயர் பிரியா, துணை மேயர் மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் முருகானந்தம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை கூடுதல் தலைமை செயலாளர் காகர்லா உஷா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் முனைவர் கார்த்திகேயன், மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் லட்சுமி பிரியா, தூய்மை பணியாளர் நல வாரிய தலைவர் திப்பம்பட்டி ஆறுச்சாமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி

தமிழகத்தில் 18ம் தேதி வரை மிதமான மழை

வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, நவ.15 - தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் வரும் 18ம் தேதி வரை இடியுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கை: தென் இலங்கை மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக இன்று கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நாளை மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

மேலும் 17ம் தேதி திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், 18ம் தேதி கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் 20ம் தேதி வரை தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 32 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 25-26 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். இன்று மற்றும் நாளை தமிழக கடலோர பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று வீசக்கூடும்.

குண்டு வெடித்து... முதல் பக்க தொடர்ச்சி

விதமாக அவை பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறின. இந்த கோர விபத்தில் காவல் நிலையக் கட்டிடம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகள் பலத்த சேதமடைந்தன. இந்த குண்டுவெடிப்பில் முதலில் 4 பேர் உயிரிழந்த

தாகத் தகவல் வெளியான நிலையில், தற்போது பலி எண்ணிக்கை 9 ஆக உயர்ந்துள்ளது.

மேலும், காவல் துறையினர் மற்றும் 3 பொது மக்கள் உட்பட 27 பேர் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். குண்டுவெடிப்புக்குப் பிறகும் சிறிய அளவிலான வெடிப்புகள் தொடர்ந்ததால், மீட்புப் பணிகளை உடனடியாகத் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. உயிரிழந்தவர்களின் உடல்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. இந்த விபத்து, வெடிபொருட்களைக் கவனக்குறைவாகக் கையாண்டதால் ஏற்பட்டதா அல்லது பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களில் ஏதேனும் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்ததால் நிகழ்ந்ததா என்பது குறித்து அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே, ஜெய்ஷ்-இ-முகமது பயங்கரவாத அமைப்பின் நிழல் அமைப்பான 'பி.ஏ.எஃப்.எஃப்' இந்த தாக்குதலுக்குப் பொறுப்பேற்றுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. 'இந்த தாக்குதலுக்கு நாங்கள் தான் காரணம்' என்று அந்த அமைப்பு கூறியுள்ள நிலையில், அதன் உண்மைத்தன்மை குறித்தும் சரிபார்க்கப்பட்டு வருகிறது. காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த வெடிமருந்துகள் வெடித்து சிதறியதில் போலீசார் உள்பட 9 பேர் பரிதாபமாக உயிரிழந்த சம்பவத்திற்கு பிரதமர் மோடி உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

பீகாரில் வெற்றி பெற்ற நிதிஷ் குமாருக்கு வாழ்த்துகள்

தேர்தல் ஆணையம் மீதான மரியாதை இதுவரை இல்லாத அளவுக்கு கீழ் இறங்கியுள்ளது

முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் தாக்கு

சென்னை, நவ.15 - பீகார் தேர்தல் அனைவருக்கும் ஒரு பாடம் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவு:

பெரும் வெற்றியை பெற்றுள்ள மூத்த தலைவர் நிதிஷ்குமாருக்கு பாராட்டுகள். பீகார் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற அவருக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். ஓயாமல் பரப்புரை மேற்கொண்ட இளந்தலைவர் தேஜஸ்வியாதவுக்கு எனது பாராட்டுகள்.

நலத் திட்ட விநியோகம், சமூக மற்றும் கொள்கை கூட்டணிகள், நாம் சொல்ல வேண்டிய அரசியல்ரீதியான செய்தியை தெளிவாக மக்களிடம் சொல்வது, இறுதி வாக்கு பதிவாகும் வரை அர்ப்பணிப்புடன் தேர்தல் பணியாற்றுவது என பலவற்றையும் ஒரு தேர்தல் முடிவு பிரதிபலிக்கிறது. இந்தியா கூட்டணியில் உள்ள அனுபவமிக்க தலைவர்கள் இத்தகைய செய்தியை உணரவும், இனி எழும் சவால்களை எதிர்கொள்வதற்கான திட்டங்களை வகுக்கவுமான ஆற்றலை பெற்றவர்கள்.

அதேவேளையில், இத்தேர்தல் முடிவுகள் தேர்தல் ஆணையத்தின் குளறுபடிகளையும் பொறுப்பற்ற செயல்களையும் இல்லாமல் ஆக்கிவிடாது. தேர்தல் ஆணையத்தின் மீதான மரியாதை இதுவரை இல்லாத அளவுக்கு கீழ் இறங்கியுள்ளது.

வலுவான, நடுநிலையான தேர்தல் ஆணையத்தை கோருவது நம் நாட்டு மக்களின் உரிமை. தேர்தலில் வெற்றி பெறாதோரின் நம்பிக்கையையும் பெறும் அளவுக்கு தேர்தல் ஆணையம் நியாயமான முறையில் தேர்தல்களை நடத்த முன்வர வேண்டும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சி அங்கீகாரம் சம்பந்தமாக

சுப்ரீம் கோர்ட்டை அணுகுவது குறித்து ராமதாஸ் ஆலோசனை

திண்டிவனம், நவ. 15- தைலாபுரம் தோட்டத்தில் இன்று நடந்த வழக்கறிஞர் சமூக நீதி பேரவை மாநில செயற்குழு கூட்டத்தில் தனது தலைமையிலான பாமகவுக்கு அங்கீகாரம் சம்பந்தமாக சுப்ரீம் கோர்ட்டை நாடுவது குறித்து நிர்வாகிகளுடன் ராமதாஸ் ஆலோசனை நடத்தினார்.

பாமகவில் தந்தை, மகன் அதிகார மோதலை தொடர்ந்து ராமதாஸ் தலைமையில் ஒரு அணியும், அன்புமணி தலைமையில் ஒரு அணியும் செயல்பட்டு வருகிறது. இரு அணியினரும் போட்டி கூட்டங்கள் நடத்தி ஆதரவாளர்களை திரட்டி வருகின்றனர். தங்களுக்கு தான் மாம்பழம் சின்னம் ஒதுக்க வேண்டும் என்று இரு அணியினரும் தனித்தனியாக தேர்தல் கமிஷனுக்கு மனு அளித்துள்ளனர். வரும் 2026 சட்டசபை தேர்தலை மனதில் வைத்து இருவரும் கட்சி நடவடிக்கைகளில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

இந்நிலையில் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அடுத்த தைலாபுரம் தோட்டத்தில் இன்று (15ம் தேதி) காலை பாமக நிறுவனர் தலைவர் ராமதாஸ் தலைமையில் வழக்கறிஞர் சமூகநீதி பேரவை மாநில செயற்குழு கூட்டம் நடந்தது. வழக்கறிஞர் சமூக நீதி பேரவை தலைவர் கோபு உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

இந்த கூட்டத்தில் பேசிய முக்கிய நிர்வாகிகள் அன்புமணி ஆதரவாளர்கள், பாமகவினர் மீது தொடர் தாக்குதல் நடத்தி வருவதாக புகார்கள் தெரிவித்தனர். கடந்த சில வாரங்களுக்கு முன் சேலத்தில் அருள் எம்எல்ஏ மீது நடந்த தாக்குதல் மட்டுமல்லாமல் மாநிலத்தில் பல்வேறு இடங்களில் பாமகவினரை அன்புமணி ஆதரவாளர்கள் தாக்கி வருவதாக புகார்கள் தெரிவித்தனர். இதற்கு பதிலளித்து பேசிய ராமதாஸ், அன்புமணி ஆதரவாளர்கள் வன்முறையை கட்டவிழ்த்துவிட்டால் அதை சட்ட ரீதியாக தான் எதிர்கொள்ள வேண்டுமே யாரும் திருப்பி தாக்க கூடாது. அன்புமணி ஆதரவாளர்களால் பாமகவினர் தாக்குதலுக்கு உள்ளானால் சமூக நீதி பேரவையினர் அவர்களை உடனடியாக தொடர்புகொண்டு சட்ட பாதுகாப்பு வழங்க வேண்டும். விரைவில் தேர்தல் வர உள்ள நிலையில் நாம் பொறுமையாகவும் சாதுர்யமாகவும் இந்த பிரச்னையை கையாள வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

தனது தலைமையிலான பாமகவை அங்கீகரிக்க வேண்டும் என ராமதாஸ் தரப்பில் தேர்தல் கமிஷனில் 2 முறை மனு அளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லாததால் உச்சநீதிமன்றத்தை நாடுவது சம்பந்தமாக இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

தொடர்ந்து திண்டிவனத்தில் உள்ள தனியார் மஹாலில் வரும் 18ம் தேதி பாமக, வன்னியர் சங்க மாவட்ட செயலாளர்கள், தலைவர்கள் கூட்டம் நடக்கிறது. மறுநாள் 19ம் தேதி இளைஞர் சங்க மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடக்கிறது. இந்த கூட்டத்தில் கட்சியின் அடுத்த கட்ட நடவடிக்கைகள், வரும் சட்டமன்ற தேர்தலில் யாருடன் கூட்டணி வைப்பது உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்தும் ராமதாஸ் கட்சியினருடன் ஆலோசனை நடத்தவுள்ளார்.

தங்கம் பவுன் ரூ.92,400க்கு விற்பனை

சென்னை, நவ.15 - உலக நாடுகள் இடையிலான போர் பதற்றம், பொருளாதார மந்தநிலை, டாலருக்கு எதிரான ரூபாய் மதிப்பு வீழ்ச்சி போன்ற காரணங்களால் தங்கம் விலை தொடர்ந்து ஏறுமுகத்தில் இருந்து வந்தது. மேலும் கடந்த சில நாட்களாக, தங்கம் விலை காலை, மதியம் என ஒரு நாளுக்கு இரு முறை மாறுதல் அடைந்து வருகிறது. இதற்கு சர்வதேச சந்தையில் ஏற்படும் மாற்றமே காரணமாக உள்ளது. அந்த வகையில், தங்கம் விலை கடந்த மாதம் வரலாறு காணாத வகையில் உயர்ந்து ஒரு கிராம் ரூ.12 ஆயிரத்து 200க்கும், பவுன் ரூ.97 ஆயிரத்து 600க்கும் விற்பனை ஆனது. தொடர்ந்து விலை ஏற்ற இறக்கத்தை சந்தித்து வந்தது.

இந்நிலையில் இன்று ஆபரண தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.190 குறைந்து, ஒரு கிராம் ரூ.11 ஆயிரத்து 550க்கும், பவுனுக்கு ரூ.1,520 குறைந்து, ஒரு பவுன் ரூ.92 ஆயிரத்து 400க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

பீகாரில் மீண்டும் பாஜக கூட்டணி ஆட்சியை பிடித்த நிலையில்

நிதிஷ் குமாரின் பதவியேற்பு விழா திடீர் ஒத்திவைப்பு?

துணை முதல்வர், அமைச்சர்கள் அதிகார பகிர்வில் கூட்டணிக்குள் சலசலப்பு

பாட்னா, நவ. 15- பீகாரில் மீண்டும் பாஜக கூட்டணி ஆட்சியை பிடித்த நிலையில் நிதிஷ் குமாரின் முதல்வர் பதவியேற்பு விழா திடீர் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. கூட்டணி கட்சிகளின் துணை முதல்வர், அமைச்சர்கள் அதிகார பகிர்வில் கூட்டணிக்குள் சலசலப்பு ஏற்பட்டுள்ளதால், பதவியேற்பு விழாவுக்கான நாள் ஒத்தி வைக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

பீகார் சட்டமன்றத் தேர்தலில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி (என்டிஏ) மொத்தமுள்ள 243 தொகுதிகளில், நான்கில் மூன்று பங்கு இடங்களைக் கைப்பற்றி, 202 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. இதில், பாஜக 89 இடங்களில் வென்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. அதன் கூட்டணிக் கட்சியான ஐக்கிய ஜனதா தளம் 85 இடங்களில் வென்று இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது. அதேசமயம், ராஷ்ட்ரிய ஜனதா தளம் மற்றும் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் அடங்கிய இந்தியா கூட்டணி படுதோல்வியைச் சந்தித்துள்ளது. பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில், பிரசாந்த் கிஷோர் தொடங்கிய 'ஜன் சுராஜ்' கட்சி ஒரு இடத்தில் கூட வெற்றி பெறாமல் கணக்கைத் தொடங்கத் தவறியது. இந்தத் தேர்தலில் பாஜக - 89, ஐக்கிய ஜனதா தளம் - 85, ராஷ்ட்ரிய ஜனதா தளம் (ஆர்ஜேடி) - 25, லோக் ஜனசக்தி கட்சி (ராம் விலாஸ்) - 19, காங்கிரஸ் - 6, ஏஐஎம்ஐஎம் - 5, ஹிந்துஸ்தானி அவாம் மோர்ச்சா (மதச்சார்பற்றது) - 5, ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா - 4, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் - விடுதலை) - 2, இந்தியன் இன்குலூரசிவ் கட்சி - 1, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) - 1, பகுஜன் சமாஜ் கட்சி - 1 ஆகிய இடங்களை பெற்றுள்ளன.

நிதிஷ்குமார்

கூட்டணி வாரியாக பார்க்கும் போது, தேசிய ஜனநாயக கூட்டணிக்கு (பாஜக, ஐக்கிய ஜனதா தளம், லோக்ஜனசக்தி கட்சி (ராம் விலாஸ்), ஹிந்துஸ்தானி அவாம் மோர்ச்சா (மதச்சார்பற்றது), ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா) 202 இடங்களும், இந்தியா கூட்டணிக்கு (ராஷ்ட்ரிய ஜனதா தளம் (ஆர்ஜேடி), காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் - விடுதலை) - 2, இந்தியன் இன்குலூசிவ் கட்சி - 1, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) - 1) கூட்டணிக்கு 35 இடங்களும் கிடைத்துள்ளன. இந்தத் தேர்தலில், பெண்களின் நலனுக்காக நிதிஷ் குமார் அரசு கொண்டு வந்த 'முதலமைச்சர் மகிளா ரோஜ்கார் யோஜனா' திட்டத்தின் கீழ் 1.20 கோடி பெண்களுக்கு வழங்கப்பட்ட தலா 10,000 ரூபாய் மற்றும் இளைஞர்களின் பேராதரவு ஆகியவை தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வெற்றிக்கு முக்கிய காரணங்களாகப் பார்க்கப்படுகின்றன. இந்த மாபெரும் வெற்றியையடுத்து, நிதிஷ் குமார் மீண்டும் 10வது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்க உள்ளார்.

இந்த வெற்றியின் மூலம், தேசிய ஜனநாயகக் கூட்டணி தொடர்ந்து ஐந்தாவது முறையாக பீகாரில் ஆட்சியைத் தக்கவைத்துள்ளது. நிதிஷ் குமாரின் பதவியேற்பு விழா, முதலில் வரும் 22ம் தேதி நடைபெறும் எனத்திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், '200-க்கும் அதிகமான இடங்கள்' என்ற இமாலய வெற்றிக் கொண்டாட்டங்களுக்கு மத்தியில், ஒரு நல்ல நாளில் பதவியேற்பு விழாவை நடத்த கூட்டணித் தலைவர்கள் விரும்புவதால், விழா முன்கூட்டியே நடத்தப்படலாம் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கூட்டணிக் கட்சிகளுடன் கலந்தாலோசித்த பிறகு வரும் 16 அல்லது 18 ஆகிய தேதிகளில் விழா நடைபெற வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த விழாவில் பிரதமர் மோடியும் கலந்துகொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகள் பாட்னாவில் உள்ள ஆளுநர் மாளிகையில் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்த வெற்றியின் மூலம், 20 ஆண்டுகளுக்கும் மேலாக பீகாரின் முதலமைச்சர் பதவியை வகித்து, அம்மாநிலத்தின் நீண்டகால முதல்வர் என்ற தனது சாதனையை நிதிஷ் குமார் மேலும் வலுப்படுத்தியுள்ளார். அவரது வியூகமான கூட்டணிகளும், நிர்வாகத்தின் மீதான கவனமுமே இந்த வெற்றிக்குக் காரணம் என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இருப்பினும், ஐக்கிய ஜனதா தளத்தில் நிதிஷ் குமாருக்குப் பிறகு அடுத்த தலைவர் யார் என்ற கேள்வியும், கூட்டணியில் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ள பாஜகவுடனான அதிகாரப் பகிர்வு (துணை முதல்வர், அமைச்சர்களின் முக்கிய இலாகா) குறித்த விவாதங்களும் பீகார் அரசியலில் எழுந்துள்ளன. அதேபோல் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஒன்றிய அமைச்சர் சிராஸ் பஸ்வானின் கட்சி 19 இடங்களை கைப்பற்றியுள்ளதால், கூடுதல் அமைச்சர் பதவி கேட்டு பேசி வருகிறது. பீகார் கூட்டணி விவகாரத்தை பொறுத்தமட்டில் பாஜக தேசிய தலைமையே முடிவு செய்வதால், அடுத்த ஓரிரு நாட்களில் கூட்டணி கட்சிகளுக்கான துணை முதல்வர்கள், அமைச்சர்கள் குறித்த விபரங்கள் பேசி இறுதி செய்யப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

29 அமைச்சர்களில் 28 பேர் வெற்றி

வாக்குப்பதிவுக்கு பிந்தைய பெரும்பாலான கருத்துக் கணிப்புகளைப் பொய்யாக்கி, பீகார் சட்டமன்றத் தேர்தலில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி (என்டிஏ) வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பதிவு செய்துள்ளது. தேசிய ஜனநாயகக் கூட்டணியின் சார்பில் களமிறங்கிய 29 அமைச்சர்களில் 28 பேர் தங்களது தொகுதிகளில் வெற்றி வாகை சூடியுள்ளனர். துணை முதலமைச்சரும், வேளாண் துறை அமைச்சருமான விஜய் குமார் சின்ஹா, லக்கிசராய் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளரை சுமார் 25,000 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். மற்றொரு துணை முதலமைச்சரும், நிதி அமைச்சருமான சாம்ராட் சவுத்ரி, தாராபூர் தொகுதியில் ராஷ்ட்ரிய ஜனதா தள வேட்பாளரை 45,000க்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றார். இருப்பினும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் சுமித் குமார் சிங், சகாய் தொகுதியில் ராஷ்ட்ரிய ஜனதா தள வேட்பாளர் சாவித்திரி தேவியிடம் 12,972 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவினார். இது ஆளும் கூட்டணியில் ஏற்பட்ட ஒரே அமைச்சர் தோல்வியாகும்.

STOVEC INDUSTRIES LIMITED

Regd. Office: N.I.D.C., Near Lambha Village, Post: Narol, Ahmedabad - 382 405, Gujarat, India.
Website: www.stovec.com, e-mail: secretarial@stovec.com, CIN: L45200GJ1973PLC050790
Tel: +91(0)79 - 6157 2300, Fax: +91(0)79 - 2571 0406

STATEMENT OF UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND NINE MONTHS ENDED SEPTEMBER 30, 2025

(Rs. in Million)

Particulars	Quarter Ended			Nine Months Ended		Year Ended
	30/09/2025	30/06/2025	30/09/2024	30/09/2025	30/09/2024	31/12/2024
	Unaudited	Unaudited	Unaudited	Unaudited	Unaudited	Audited
Total income from operations (net)	408.82	567.54	573.89	1,466.92	1,785.49	2,345.70
Net Profit for the periods / year (before tax, Exceptional and/or Extraordinary items)	16.13	39.25	39.97	89.92	150.85	174.49
Net Profit for the periods / year before tax (after Exceptional and/or Extraordinary items)	16.13	39.25	39.97	89.92	150.85	174.49
Net Profit for the periods / year after tax (after Exceptional and/or Extraordinary items)	11.97	29.58	30.89	67.34	114.30	129.61
Total Comprehensive Income for the periods / year [Comprising Profit (after tax) and Other Comprehensive Income (after tax)]	10.72	28.82	30.68	63.59	113.33	124.60
Paid up Equity Share Capital (Face value per share ₹10)	20.88	20.88	20.88	20.88	20.88	20.88
Other equity (excluding revaluation reserves) as at balance sheet date	-	-	-	-	-	1,228.75
Earnings per share of ₹10 each (not annualised for the quarters):						
a) Basic (Rs.) :	5.73	14.17	14.79	32.25	54.74	62.07
b) Diluted (Rs.) :	5.73	14.17	14.79	32.25	54.74	62.07

Notes:

(1) The above is an extract of the detailed format of unaudited financial results for the quarter and six months ended June 30, 2025 filed with the Stock Exchange prepared in accordance with the Indian Accounting Standards (Ind AS) notified under Section 133 of the Companies Act, 2013 (the Act) [Companies (Indian Accounting Standards) Rules, 2015] and other relevant provisions of the Act.

(2) In accordance with the requirement of Regulation 33 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, the Statutory Auditors have performed a limited review of Company's unaudited financial results for the quarter and six months ended June 30, 2025. The full format of unaudited financial results are available on the Company's Website, www.stovec.com and on the BSE website, www.bseindia.com.

For Stovec Industries Limited
Sd/-
Shailesh Wani
Managing Director
(DIN: 06474766)

Place: Ahmedabad
Date: November 14, 2025

RBL BANK LTD

RBL BANK

Administrative Office: 1st Lane, Shahpuri, Kolhapur-416001.
Branch Office:- Sai Kalyani Towers, No.56/105, G.N. Chetty Road, T. Nagar, Chennai-600017.

SECURITISATION NOTICE UNDER S. 13(2) OF SARFAESI ACT, 2002.

We, **RBL Bank Limited** the secured creditor of Applicant & Co-Applicant mentioned in column no.2 below inform you all that your account has been classified as Non-performing Account in our accounts pursuant to your defaults in making payment/ repayment of principal and interest. An amount is now due and payable by you together with further interest thereon to **RBL Bank Ltd.** In spite of our repeated demands you have not paid the amount(s) outstanding in your account(s) and you have not discharged your liabilities. We, therefore, issued notice under section 13(2) of Chapter III of the securitization and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 demanding payment of the above mentioned amounts together with further interest applicable at the contracted rates, costs, charges, other moneys to discharge your liabilities in full within 60 days from the date of the notice.

Sl. No.	Name of Borrower and Loan Account No.	Description of the property mortgaged	NPA Date & Amount O/s
1	**Mr. Siva S, S/o. Suyambu, Mrs. Jayashree K D/o. Kurusamy, Mrs. Baby M, D/o. Makeram, Mr. Kurusamy C, S/o. Chinna Nadar, Mr. Ramesh K, S/o. Kurusamy, Mrs. Jeyalekshmi, D/o. Kurusamy,** All are at: No.48S, Paramarthalingapuram, Veturmadam (Po), Nagercoil, Agasteewaram, Vetturnimadam, Kanniyakumari, Tamilnadu-629003. **Loan Account Number: 809002617939**	**PROPERTY OWNED BY: MRS.BABY M, D/O. MAKERAM** **Schedule of Property:** District Kanyakumari, Registration District Kanyakumari, Sub registrar Office Vadasery, Taluk Agasteeswaram, Village Vadasery West, Re.Sy.No.A1/38-12, Old Sy.No.2785, Measuring 5.250 Cents (2286.9 Sq.Feet) Chitta No.2783. **BOUNDED ON: East:** Property sold by Chellathai; **South:** Madan Thamburan Temple; **West:** Pathway; **North:** Property belonged to Lekshmi.	**NPA Date: 06-10-2025** **Total amount of Rs.5,21,648.46** **Outstanding due as on: 28-10-2025** **Demand Notice Date: 03-11-2025**
2	**Mrs. Manju.V, W/o Mr.Mani.N, Mr. Mani.N S/o Nagaran,** No.2-166, Chanalkarai Keel Chithambaramcode, Kalkulam, Manalikarai Near Temple, Kanniyakumari Tamilnadu-629164. **Home Loan Account Number: 809002611821**	**PROPERTY OWNED BY: MR.MANI.V** **Schedule of Property:** Kanniyakumari District, Kanniyakumari Registration District, Sub-Registration Office Vadasery, Taluk Agastheeswaram, Village Vadasery (At present Putheri), New Sy.631/13, measuring 2cents, Patta No.367. **Bounded on: East:** Property belonged to Raman Pillai, Channel; **South:** 6 feet width Pathway; **West:** Property belonged to Gopalan; **North:** Property belonged to Selvamani.	**NPA Date: 07-10-2025** **Total amount of Rs.6,92,257.61** **Outstanding due as on: 28-10-2025** **Demand Notice Date: 03-11-2025**
3	**Mr. Sekar Arumugam, S/o Duraisamy, Mrs. Dhanalakshmi Sekar, W/o Sagadevan D,** No.36/1A, Sholinghur Road, Ramakrishana Raji Pet, Thiruvallur-631303. **Home Loan Account Number: 809003119128**	**PROPERTY OWNED BY: MR. A.SEKAR** **Schedule of Property:** In Kanchipuram Registration district, Thiruvallur Revenue District, R.K Pet Sub Register Office, R.K.Pet (Before Pallipet) Taluk, Villakanampudi Revenue Village, Punjai Survey No.36/1A1A, 0.39 acres 1/403, Sholingur Road, R.K. Pet in this land Bounded on East by Road, West by Plot belongs to Lakshmi wife of C.Manickam, North by House belongs to Nalini, South by House belongs to Dhanappan, in this East to west Northernside 76 1/2 feet, East to West southernside 83 1/4 feet, North to South Both Side 15 1/4 feet, in totally 1218sq.feet and R.C.C.Building construction and service connection situated therein.	**NPA Date: 05-10-2025** **Total amount of Rs.14,83,067.98** **Outstanding due as on: 28-10-2025** **Demand Notice Date: 03-11-2025**

Now the authorized officer of **RBL Bank Ltd.** do hereby publish the contents of the above demand notice as provided under the Rules for discharge your liabilities in full, failing which, we shall, without any further reference, be constrained to enforce the following security created by you in our favour by exercising any or all the rights given under the said Act. Please note that this publication is made without prejudice to such rights and remedies as are available to **RBL Bank** against the borrower and the guarantors of the said financial under law. You are further requested to note that as per section13(13) of the said Act, you are restrained/prohibited from disposing of or dealing with the above security or transferring by way of sale, lease or otherwise of above secured asset, without our prior written consent.

Place: Tamilnadu, Date: 15-11-2025 **Sd/- Authorised Officer, RBL BANK LTD.**

Truhome FINANCE

TRUHOME FINANCE LIMITED (Formerly Shriram Housing Finance Ltd.)

Head Office: Level -3, Wockhardt Towers, East Wing C-2, G Block, Bandra Kurla Complex, Bandra (East), Mumbai 400 051;
Tel: 1800 102 4345 ; **Website:** http://www. truhomefinance.in
Reg.Off.: Srinivasa Tower, 1st Floor, Door No.5, Old No.11, 2nd Lane, Cenatoph Road, Alwarpet, Teynampet, Chennai-600018

APPENDIX-IV-A [SEE PROVISION TO RULE 8(6)] SALE NOTICE FOR SALE OF IMMOVABLE PROPERTIES

E-Auction Sale Notice for Sale of Immovable Assets under the Securitization and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 read with provision to Rule 8(6) of the Security Interest (Enforcement) Rules, 2002.

Notice is hereby given to the public in general and in particular to the Borrower/s and Guarantor/s that the below described immovable properties mortgaged/ charged to Truhome Finance Limited (formerly M/s Shriram Housing Finance Limited), the Physical Possession of which have been taken by the Authorized Officer of Truhome Finance Limited, will be sold on "As is where is", "As is what is" and "Whatever there is" basis in e-auction on 01.12.2025 between 11:00 a.m. to 1:00 p.m. for recovery of the balance due to Truhome Finance Limited from the Borrowers And Guarantors, as mentioned in the table.

Details of Borrowers and Guarantors, amount due, Short Description of the immovable property, reserve price and earnest money deposit and date of Inspection are also given as:

Name of Borrowers/ Co-Borrowers/ Guarantors/Mortgagers	Amount of Recovery and date of Demand Notice	Reserve Price (Rs.) & Bid Increment	Date & Time of Auction	Contact Person Details – (AO and Disposal team)
1. Mrs. Girija E (Borrower/Applicant) W/o Ethiraj No.335, KTP Salai, Pakkam, Venkatesapuram Thiruvallur – 602 024 **2. Mr. Ethiraj G (Co-borrower/Co-Applicant) S/o. Gajendiran No.335, KTP Salai, Pakkam, Venkatesapuram Thiruvallur – 602 024** **Date of Possession & Type** **19th July, 2025 & Symbolic Possession** **Encumbranches known** **Not known**	Demand Notice Date: 09.05.2025 Rs. 39, 99, 520 (Rupees Thirty Nine Lakhs Ninety Nine Thousand Five Hundred and Twenty Only) as on dated 06/05/2025 under reference of Loan Account No. SHLHCHNI0002252 & Rs. 2, 51, 400 (Rupees Two Lakhs Fifty One Thousand Four Hundred Only) as on dated 06/05/2025 under reference of Loan Account No. SLPHCHNI0002257with further interest at the contractual rate, within 60 days from the date of receipt of the said notice.	Rs. 80,0,000/- (Rupees Eighty Lakhs Only) **Bid Increment:** Rs. 10,000/- and in such multiples. **Earnest Money Deposit (EMD) (Rs.)** Rs 8,00,000/- **Last date for submission of EMD : 29.11.2025**	**01st Dec., 2025** **Time : 11.00 a.m. to 01.00 p.m**	**S Singh 8428648685** **James Clement - 72002 81906** **Property Inspection Date: :** **29.11.2025** **11 Am to 06 PM**

Description of Property

S No	Survey Numbers As per Old Patta	Survey Numbers As per TSLR Patta	T.S Number	Extent in Cents
1	135/1C	135/1C Part	12/5	40
2	135/2A	135/2 Part	12/6	18
3	135/2B			8
4	123/2C1	123/1,123/2 Part	11/10	78
5	123/2D(Part)		11/9	47.75
6	123/1B		11/5	31
7	123/2B			17
8	123/1A2		11/4	31
9	123/2A2			17
10	123/1C1 (Part)		11/7	12.53
11	123/2C3 (Part)			7.12
12	122/2A	122/1,122/2 Part	9/7	3
13	122/2B		9/6	2
14	123/1C2	123/1, 123/2 part	11/6	32
15	123/2C2			14
16	123/1(Part) subdivided as 123/1A1		11/1	20
17	123/2(Part) subdivided as 123/2A1			10
			Total	388.4

Totally measuring an extent of 3 Acres 88.40 Cents (i.e. 1,69,187 Square feet or thereabouts) and as per TSLRs, mentioned above comprised in Block No. 22, Ward G and bounded on the :North by : Survey No. 116, Survey No.122/1 and Survey No.120, South by : Survey No.125 and Survey No.134, East by : Survey No. 123/2D (Part), 123/1C1 (part) 123/2C3 (Part), Survey No.124 (Part) and Survey No. 125 (Part), West by : Private land abutting Vanagaram Road, Survey No. 115 and Survey No.135/1B. And situated within the Registration District of Chennai North and Registration District of Konnur (formerly Sub Registration District of Ambattur).

SCHEDUL 'B' : (Property gifted towards OSR area)

All that piece and parcel of the vacant land measuring an extent of 1523.58 Sq.mt. towards open space Reservation area (i.e. 16,400 Sq .Ft., or thereabouts) in the total extent of Schedule "A" Property.

SCHEDUL 'C' : (Remaining land area available after deducting gifted portion)

All that piece and parcel of land comprising an extent of 1, 52,787 Sq.Ft. in Schedule "A" Property.

SCHEDUL 'D' : (Property hereby agreed to be conveyed to the Purchaser(s))

A Residential unit bearing Apartment No. D1803 in Eighteenth Floor measuring about 862 Sq.Ft., carpet area (Comprising in 1265 Sq.Ft., of super built up area) in the apartment complex put up in Schedule 'C' along with one Covered Car Park & One Two Wheeler Park together with 277 Sq.Ft., of undivided share of land in and out of Schedule 'C' Property in the residential project known as " CASAGRAND CRESCENDO" situated at Vanagaram Road, Athipattu Village, Ambattur Taluk, formerly Thiruvallur District and presently Chennai District as per the specification annexed herewith.

1) **For detailed terms and conditions of the sale, please refer the website of Truhome Finance Limited (Formerly Shriram Housing Finance Limited) website.**
2) **The intending bidders have to submit their EMD amount to be deposited by way of RTGS/NEFT to the account details mentioned herein below: BANK NAME: AXIS BANK LIMITED BRANCH: BANDRA KURLA COMPLEX, MUMBAI BANK ACCOUNT NO. Current Account No. 911020045677633 IFSC CODE: UTIB0000230.**

Place : Chennai
Date : 15-11-2025

Sd/- Authorised Officer- Truhome Finance Limited
(Formerly Shriram Housing Finance Limited)

pfrda पेंशन निधि विनियामक और विकास प्राधिकरण
PENSION FUND REGULATORY AND DEVELOPMENT AUTHORITY

E-500, Tower E, Fifth Floor, World Trade Center,
Nauroji Nagar, New Delhi – 110029

APPOINTMENT OF TRUSTEES - NPS TRUST

PFRDA invites applications from eligible Indian Citizens for appointment as Trustee on the Board of National Pension System Trust (NPS Trust). The appointment will be for a term of three years, extendable by upto two additional years.

For detailed information, please visit www.pfrda.org.in

Application due date: 15th December 2025.

Sd/-
Chief General Manager
Regulation Department-Fund Management
(NPS Trust)

HEMANG RESOURCES LIMITED

CIN - L65922TN1993PLC101885
Regd. Office : Flat No. 69, 2nd Floor, Bhaiya Complex, P H Road, Chennai - 600 007.
Email- cs@bhatiacoalindia.com, Website- http//bhatiacoalindia.com/biil/index.htm

Extract of Statement of Unaudited Financial Result (Standalone) for the Quarter and Period Ended 30th September, 2025

(Rs. In Lakhs except EPS)

Sl. No.	Particulars	Quarter Ended 30.09.2025 (Unaudited)	Period Ended 30.09.2025 (Unaudited)	Quarter Ended 30.09.2024 (Unaudited)
1	Total Income from operations (net)	-	123.76	96.46
2	Net Profit / (Loss) from ordinary activities after tax	(21.82)	31.82	(31.73)
3	Net Profit/ (Loss) from ordinary activities after tax (after extraordinary items)	(21.82)	31.82	(31.73)
4	Equity Share Capital	1,320	1,320	1,320
5	Reserve as on 31.03.2025 (excluding Revaluation Reserve as shown in the Balance Sheet)	-	-	-
6	Earning Per Share (befoe extraordinary items) (of 10/- each) Basic & Diluted	(0.17)	0.24	(0.24)
7	Earning Per Share (after extraordinary items) (of 10/- each) Basic & Diluted	(0.17)	0.24	(0.24)

Note: The above is an extract of the detailed format of Quarterly Unaudited Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly Unaudited Financial Results are available on the Stock Exchange website. www.bseindia.com and on company's website www.bhatiacoalindia.com/BIIL/Unaudited.htm

For & Behalf of the Board of
Hemang Resources Limited
Komal Jitendra Thakker
Whole Time Director -DIN: 07062825

Place: Chennai
Date : 11th November 2025

M/S. ELECTRONICA FINANCE COMPANY

efl ...by your side

Corporate Office: Audumbar, 101/1, Erandwane, Dr. Ketkar Road, Pune, Maharastra - 411 004
Branch Office : No. 1167,T.V.S. Colony, Anna Nagar, Western Extension, Chennai - 600 101 Contact No. + 91 99529 27335

PUBLIC NOTICE FOR AUCTION CUM SALE

Pursuant to taking possession of the secured asset mentioned hereunder by the Authorized Officer of **M/s. Electronica Finance Company** under the **Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002** for the recovery of amount due from borrower/s, offers are invited by the undersigned in sealed covers for purchase of immovable property, as described hereunder, which is in the physical possession, on **'As is where is basis'** particulars of which are given below:-

Loan A/c No. / Borrower(s) / Co-Borrower(s)/ Guarantor(s)	Demand Notice Date and Amount	Reserve Price	Earnest Money Deposit)	Total Loan Outstanding (As on 30/11/2025)	Date & Place of Auction
(Loan Account Nos. 148-488181-2015-2-2, 148-488181-2016-2-4, 148-488181-2016-19-3, 148-488181-2016-27-5 / Chennai Branch) **Borrower and Co- borrower details** **1. M/s Satnaam Industries (Borrower)** No. 2/342, Selva Laxmi Nagar, Mouglivakkam, Porur, Chennai - 600116 **2. Ishwant Singh (Borrower/Proprietor/Guarantor)** No. 118B, Suresh Nagar, Krishna Street, Porur, Chennai - 600 116 **3. Preeti Ajith Singh (Guarantor)** No. 118B, Suresh Nagar, Krishna Street, Porur, Chennai - 600 116	**31/01/2018 & Rs.2,74,57,955.07** (Rupees Two Crore Seventy Four Lakhs Fifty Seven Thousand Nine Hundred and Fifty Five and Paisa Seven Only) as on 31/01/2018	**Rs. 1,80,00,000/-** (Rupees One Crore and Eighty Lakhs Only)	**Rs. 18,00,000/-** (Rupees Eighteen Laksh Only)	**Rs.5,49,08,663/- (Rupees Five Crores Forty Nine Lakhs Eight Thousand Six Hundred And Sixty Three Only)** Further interest will be charged as applicable, as per the Loan Agreement on the amount outstanding in the notice and incidental expenses, costs, etc., is due and payable till its realization.	**18th December 2025 at 10.00 A.M. Online at www. auctiontiger.com**

DESCRIPTION OF THE IMMOVABLE PROPERTY: Item 1: All that part and parcel of land with building situated at Jamin Pallavaram, Village, Tambaram Tluk, Kancheepuram District, comprised in Gramanatham, S. No. 56/8, Town Survey Nos. 37/3, 38/2, and 42/2, Block No. 46, RDB/8A No. 1555/16, bearing Door No. 7-C, Duraikannu Salai, Jamin Pallavaram and measuring to an extent of 2613 sq.ft. with 1/3rd undivided share of common passage in 1573 sq.ft. **Boundary of the aforesaid property:** North by:- Vacant Land, South by :- Land belonging to Jaikumar, East by :- Land belonging to Kalpana and Malarvizhi, West by:- Land belonging to Seetharaman, Measuring : Eastern side:- 47 feet, Western side :- 53 feet, Northern side:- 52 feet, Southern side:- 52 ½ feet,

Item 2 : All that part and parcel of land/building/structure and fixtures situate at Jamin Pallavaram Village, Tambaram Taluk, Kancheepuram District, comprised in Gramanatham, S. No. 56/8, Town Survey Nos. 43/3, Block No. 46, RDB/8A No. 1554/16, Duraikannu Salai, Jamin Pallavaram and measuring to an extent of 1370 sq.ft. with 1/3rd undivided share of common passage in 1573 sq.ft. North by:- Land belonging to Kalpana and 5 feet Common Passage, South by :- 10 feet common passage + 13 feet common passage leading to Duraikannu Salai, East by :- Land belonging to Haridass, West by:- Land belonging to Damodaran, **Measuring :-** Eastern side:- 30 feet, Western side :- 20 ½ + 13 ½ feet, Northern side:- 51 feet, Southern side:- 37 + 10 feet,

Item 3: All that part and parcel of land/building/structure and fixtures situate at Jamin Pallavaram Village, Tambaram Taluk, Kancheepuram District, comprised in Gramanatham, S. No. 56/8, Duraikannu Salai, Jamin Pallavaram and common passage measuring an extent of 675 sq.ft. North by:- Land with building belonging to Malarvizhi, South by :- 13 feet common passage leading to Duraikannu Salai, East by :- Land belonging to Haridass, West by:- Land belonging to Damodaran **Measuring :-** Eastern side:- 20 ½ + 10 feet, Western side :- 21 ½ + 10 feet, Northern side:- 37 + 10 feet, Southern side:- 33 + 10 feet, Item 1,2 and 3, in all totalling measruing 4658 sq.ft. land with building together with 2/3rd undivided share of common passage in 1573 sq.ft. leading to Duraikannu Salai, situate within the sub registration district of Pallavaram and registration district of Chennai South.

TERMS & CONDITIONS :

1. Date of Inspection of the Immovable Property is on **11th December 2025 between 10.00 A.M. to 5.00 P.M.**
2. **Last Date of Submission of EMD** in the prescribed tender forms along with EMD is **18th December 2025 before 5.30 PM** at the Branch office at M/s Electronica Finance Limited, Chennai Branch, No. 1167,T.V.S. Colony, Anna Nagar, Western Extension, Chennai 600 101. mentioned herein. Tenders without EMD and received beyond last date will be considered as invalid tender and shall accordingly be rejected. The Demand Draft Should be made in favor of **'M/s. Electronica Finance Limited** No interest shall be paid on the EMD.
3. **Date of Opening of the Bid/Offer for** Property is on **18th December 2025** at the website **www. auctiontiger.com at 10.00.A.M.** The bids will be held in the presence of the Authorised Officer.
4. The notice is hereby given to the Borrower/s and Guarantor/s, to remain present personally at the time of sale and they can bring the intending buyers/purchasers, as per the particulars of Terms and Conditions of Sale.
5. **The Borrower(s)/Guarantor(s) are hereby given 30 DAYS SALE NOTICE UNDER THE SARFAESI ACT, 2002** to pay the sum mentioned as above before the date of Auction failing which the immovable property will be auctioned and balance, if any, will be recovered with interest and costs. If the Borrower pays the amount due to M/s. Electronica Finance Limited. in full before the date of sale, auction is liable to be stopped.
6. The details of terms and conditions of the auction sale are incorporated in the prescribed bid form. Bid forms are available at the above mentioned branch office.
7. The sale will be in favour of the highest bidder and not his /her nominee. However, the Authorised Officer reserves the absolute discretion to accept or reject the bid or postpone / cancel the sale, modify the terms without any prior notice or assigning reason if deemed necessary.
8. Under section 13 [8] of the Securitization Act, the borrowers can redeem the secured asset by payment of the entire outstanding including all costs, charges and expenses before notification of sale.
9. The property is situate in Archaeology Survey of India, [ASI] protected site.

Place : Chennai
Date : 15th November 2025

Sd/- Authorised Officer
For : M/s. Electronica Finance Limited

JG CHEMICALS

J.G.Chemicals Limited

Adventz Infinity@5, Unit No. 1511, Street No. 18, BN Block,
Sector – V, Salt Lake City, Kolkata – 700 091, India,
Email: corporate@jgchem.com | Web: www.jgchem.com
CIN: L24100WB2001PLC093380

Statement of Unaudited Consolidated Financial Results for the Quarter and Six Months ended 30th September 2025

(₹ in Crores except EPS data)

Particulars	Quarter ended			Half year ended		Year ended
	30-09-2025	30-06-2025	30-09-2024	30-09-2025	30-09-2024	31-03-2025
	(Unaudited)	(Unaudited)	(Unaudited)	(Unaudited)	(Unaudited)	(Audited)
Revenue from operations	220.27	218.01	212.08	438.29	414.61	847.94
Net Profit / (Loss) for the period (before tax and exceptional items)	20.35	21.85	23.15	42.20	44.39	89.90
Net Profit / (Loss) for the period before tax (after exceptional items)	20.35	21.85	23.15	42.20	44.39	89.90
Net Profit / (Loss) for the period after tax	15.03	16.36	17.14	31.39	33.05	66.76
Total comprehensive income for the period	15.03	18.60	23.30	33.62	39.20	69.11
Paid up Equity Share Capital [Face value ₹10 per share]	39.19	39.19	39.19	39.19	39.19	39.19
Total Reserves	-	-	-	-	-	425.57
Earnings per Equity Share (of ₹ 10 each) -Basic and Diluted (Not Annualised*)	*3.67	*4.03	*4.21	*7.70	*8.09	16.34

Notes :

1.Additional information on Unaudited Standalone Financial Results is as follows: (₹ in Crores)

Particulars	Quarter ended			Half year ended		Year ended
	30-09-2025	30-06-2025	30-09-2024	30-09-2025	30-09-2024	31-03-2025
	(Unaudited)	(Unaudited)	(Unaudited)	(Unaudited)	(Unaudited)	(Audited)
Revenue from operations	59.60	70.97	70.94	130.56	135.95	271.82
Profit before exceptional item and tax	5.53	8.47	8.52	14.00	13.63	27.00
Profit before tax	5.53	8.47	8.52	14.00	13.63	27.00
Profit after tax	4.14	6.37	6.29	10.51	10.12	20.02

2. The Unaudited Consolidated Financial Results and Unaudited Standalone Financial Results have been reviewed by the Audit Committee and approved by the Board of Directors at its meeting held on 14th November, 2025. The Statutory Auditors have given Limited Review Report on these results.
3. The above is an extract of the detailed format of Financial Results filed with Stock Exchanges under Regulation 33 of SEBI (LODR) Regulations, 2015. The full format of the standalone and consolidated Financial Results for the quarter ended September 30, 2025 are available on the BSE Limited website (URL: www.bseindia.com), the National Stock Exchange of India Limited website (URL: www.nseindia.com) and on the Company's website (URL: www.jgchem.com).
4. These results have been prepared in accordance with the Indian Accounting Standards (referred to as "Ind AS") Financial Reporting prescribed under Section 133 of the Companies Act, 2013 read with Companies (Indian Accounting Standards) Rules as amended from time to time.

By order of the Board
For J.G.Chemicals Limited
Sd/-
Suresh Jhunjhunwala
Chairman and Whole-time Director

Date : 14.11.2025
Place: Kolkata